IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 70/2020

Deposition of witness for prosecution : PW 7

Defense :

Name : பன்னீர்செல்வம்

Father's Name : அண்ணாமலை

Village : 69ஏ, தர்மராஜாகோவில் தெரு, ஆரணிபாளையம்

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.06.2023

**முதல் விசாரணை**

**எதிரிகள் 1 முதல் 4 ஆஜர். 5ம் எதிரி இறப்பு**

1. நான் தற்போது 69ஏ, தர்மராஜாகோவில் தெரு, ஆரணிபாளையத்தில் வசித்து வருகிறேன். நான் லாரி டிரைவராக வேலை செய்கிறேன். எனக்கு 3 மகன்கள் அவர்களின் பெயர் சரவணன் என்கிற ஞானசேகரன், பிரசாந்த், மணிகண்டன் ஆகும். 3 மகன்களும் டாடா எ.சி வாகனத்தில் ஐஸ்கிரிம் விற்கும் தொழில் செய்து வருகிறார்கள்.

2. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது கோவில திருவிழாவின்போது பிரச்சினை ஏற்பட்டதாக சொன்னார்கள் யார் யாருக்குள் என்ன பிரச்சினை ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது.

**அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அதனை தொடர்ந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

1. மேற்படி நெம்பர் வழக்கில் போலிசார் என்னை விசாரித்தபோது என் மகன் மணிகண்டனுக்கும் ஏமு என்கிற ஹேமநாதனுக்கும், லோகேஷ் மற்றும் சிலருக்கும் ஆரணி

பாளையத்தில் நடைபெற்ற கோவில் திருவிழாவின்போது நடந்த தகராறின் காரணமாக முன் விரோதம் இருந்து வந்தது என்றும்,

2. கடந்த 10.06.2017 அன்று ராட்டினமங்கலம் கூட் ரோட்டில் என் மகன் மணிகண்டன் ராட்டினமங்கலம் கூழ் வார்க்கும் திருவிழாவிற்கு செல்வதாக சொல்லிவிட்டு சென்றான் என்றும்

3. அங்கு ஏமு என்கிற ஹேமநாதன் மற்றும் லோகேஷ் ஆகியோர்கள் வீண் தகராறு செய்தார்கள் என்றும் அப்போது 12.06.2017 அன்றுஇரவு 9.00 மணி அளவில் என் மகன் மணிகண்டன் சி.எஸ்.ஐ சர்ச் அருகில் நின்றுக்கொண்டிருந்தான் என்றும் அப்போது கோபி , ஏமு என்கிற ஹேமநாதன் மற்றும் லோகேஷ், சுந்தர் குமார் ஆகியோர் ஒன்று சேர்ந்துக்கொண்டு என் மகனிடம் தகராறு செய்தார்கள் என்றும்

4. அப்போது மணிகண்டன் தப்பித்து வரும்போது எதிரிகள் அசிங்கமாக பேசி கையாலும், காலாலும் தாக்க முற்பட்டார்கள் என்றும், என் மகன் சத்தம் போட்டபோது ஏமு என்கிற ஹேமநாதன் என் மகனை கையால் வைத்திருந்த கத்தியால் இதோடு ஒழிந்து போ என்று குத்தினான் என்றும் அதை தடுத்த என் மகன் மணிகண்டனுக்கு இடது கை மணிக்கட்டு, இடது பின் பக்க விலா, மற்றும் வலது புஜ கை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு வலி தாங்க முடியாமல் சத்தம் போட்டார் என்றும் அதை பார்த்து செந்தில் மற்றும் துளசி ஆகியோர் வருவதை பார்த்து எதிரிகள் தப்பித்து ஓடிவிட்டார்கள் என்றும்,

5. மேற்படி சம்பவத்தை கேள்விப்பட்ட என் மகன் பிரசாந்த் காயம்பட்ட என் மகன் மணிகண்டனை வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்றும் பின்னர் என் மகன் மணிகண்டனை வேலூர் அரசு மருத்துவமனையில் விசாரித்தபோது சம்பவம் நடந்தது பற்றி தெரிவித்தார் என்றும் வாக்குமூலம் கொடுத்தார் என்றும்

6. அந்த புகார் வாக்குமூலத்தின் அடிடைப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் அனைவரும் எங்கள் பகுதியை சோந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்பதற்காக உண்மைகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.